1993 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 263, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண். 264, டாக்டர். மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

264—

மதுரை இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைப் பிரிவு.

*9674—டாக்டர் மு. காளிராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைப் பிரிவு (Department of Surgical oncology) துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சைப் பிரிவு 1—1—1993 முதல் இயங்கி வருகிறது.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள புற்று நோய் அறுவை சிகிச்சைப் பிரிவில் மொத்தமாக 4 படுக்கை வசதிகள் தான் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதுவும் ஒவ்வொரு வார்டுக்கும் ஒவ் வொன்றாக இருக்கிறது. அது போதாத சூழ்நிலை அங்கே இருப் பதாக அறிகின்றேன். ஆகவே குறைந்தது 10 படுக்கை களாவது அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப. . பயன்படுத்தாத சில வார்டுகள் அங்கே இருப்பதாக தெரிகிறது. . அதை ஒதுக்கி கொடுத்து வாரத்திற்கு ஒரு முறை ஆப்பரேஷன் தியேட்டரும் ஒதுக்கி கொடுத்து அங்கே உள்ள நோயாளிகளுடைய குறையை தீர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனி பிரிவு ஏற்படுத்துவதன் மூலமாகத் தான் அந்த துறைக்கு முக்கியத்துவம் கிடைக்கும் என்ற வகையில் தான் அரசு இப்போது ஆணை இட்டிருக்கிறது. அதற்காக குறைந்த பட்சம் 10 படுக்கைகள் தேவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே இப்போது இருக்கிற நிதிப் பிரச்சினையை மனதில் வைத்துத்தான் 4 படுக்கைகள் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஏற்கெனவே இருந்த சர்ஜரி டிபார்ட்மென்டிலேயிருந்து அவர்களுக்கு 4 படுக்கைகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவ மனையில் எந்தெந்த படுக்கைகள் தேவையில்லாத அளவுக்கு எந்தெந்த துறையிலே இருக்கிறது என்று சொன்னால் அதை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 265, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

265—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல்.

*10141—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் சத்திரக்குடி மற்றும் பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் குறித்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.